RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# திருக்குறளும் அறமும்

**இரா. வீரமணி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, டாக்டர் என்.ஜி.பி.கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி) காளப்பட்டி சாலை, கோயம்புத்தூர்-641048, தமிழ்நாடு, இந்தியா

# Virtue and Human Values in the Thirukkural

**R. Veeramani** [a, *]

[a] Department of Tamil, N.G.P. Arts and Science College (Autonomous), Kalapatti Road, Coimbatore - 641048, Tamil Nadu India

* Corresponding Author:
veeramani@drngpasc.ac.in

**ABSTRACT**

The most important reason for the world to remain stable and rotating since its inception is only morality. Life has evolved from a tiny thing on this earth to become grass and then to become the human race. Man is only a social animal. Even though he has reached the pinnacle of scientific development as a mature person, morality is the only thing that makes a man human. The next level of love is morality. Valluvar is a philosopher who is admired all over the world. He is accepted by everyone as the equal of Valluvar all over the world. Even if he established profound ideas about morality, materialism, and pleasure through his teachings, he would have established morality as a major element. The love and morality within that life are the reasons for every living being to remain stable and live in this world. When a human being helps a fellow human being when he is suffering and stands by morality, it shows that a human being is wise. Valluvar says that if one continues to do good deeds, one will attain immortal fame and undiminished wealth. This also contains a scientific concept. If one continues to do good deeds in a human life, they will return to us a thousandfold as good. It is a scientific law that every action has a reaction corresponding to that action. Valluvar emphasizes that if one lives by doing good deeds consistently, the human race will flourish. It will attain immortal fame. The purpose of this article is to examine the virtue that Valluvar saw in the path of virtue

**Keywords:** Valluvar, human race, Purpose, Morality, Virtue

## முன்னுரை

தமிழர்கள் பண்டைக்காலத்திலிருந்து அறவழியில் மட்டுமே தங்களது வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அன்பின் வழியால் மட்டுமே அறம் பிறக்கும். அன்பின் அடுத்த நிலை வெளிப்பாடாகவும் பரிணாமமாகவும் அறத்தைக் கொள்ளலாம். சங்க காலத்தில் வாழ்ந்த அரசர்களும் சிற்றரரசர்களும் குறுநில மன்னர்களும் அறவழியின் படி தன்னை நாடி வந்த புலவர்களுக்கும் பாணர்களுக்கும் நிலத்தையும் பொன்னையும் பரிசாக வழங்கினார்கள். தம்மைப் போற்றிப் பாடிய புலவர்களுக்கு அளப்பரிய செல்வத்தை வழங்கி எல்லையற்ற மகிழ்வில் வாழ்ந்திருந்ததை சங்க இலக்கியப் பாடல் வழி அறிய முடிகிறது. சங்க இலக்கியத்திற்கு அடுத்துத் தோன்றிய திருக்குறளும் அறத்தின் மேன்மை பற்றிப் பேசுகிறது. வள்ளுவன் வழியிலேயே அவ்வையும் அறம் செய விரும்பு என்றார். அறத்தாலும் அன்பாலும் மட்டுமே இவ்வுலகம் இன்றளவிலும் நிலைபெற்று உள்ளது. எல்லை தாண்டிச் சிந்தித்த மனிதர்கள் எல்லோருமே அன்பும் அறமும் சூழ்ந்தவர்கள். பரந்து பட்ட சிந்தை பெற்றவன் மட்டுமே அறத்தைத் தாங்கியிருப்பான். அத்தகு மேன்மை மிகு சிந்தையாம் அறத்தை வள்ளுவன் வழி ஆராய்ந்து தேடுவோம்.

## அறத்தின் நிலைப்பாடு

அன்பு சார்ந்து மனிதன் தனிமனித ஒழுக்கத்துடன் நல்வினைகளைச் செய்து தன் வாழ்க்கையை வாழ்வதே அறம் என்று குறிப்பிடுகிறார் வள்ளுவர். அறத்துப்பால் முழுமையும் நல்ல ஒழுக்க முறையான வாழ்வியலைச் சுட்டுகிறது. நல்வினைகளை ஒரு மனிதன் வாழ்வியலில் செய்து கொண்டே வாழ்ந்து வந்தால் அதுவே உயர்வைத் தந்திடும் என்பது வள்ளுவனின் கருத்து. இக்கருத்தை நீதி இலக்கியங்களின் வாயிலாக உணர இயலும் என்ற இக்கருத்துக்கு வலுச்சேர்க்கும் விதமாகத் தா.ஏ.ஞானமூர்த்தி,

"இலக்கியம் அடிப்படையில் நிலைபேறுடையதும் ஆழமானதுமான மனித உண்மையைக் கொண்டிருப்பதால் அதனை நாம் போற்றுகிறோம். ஒரு சிறந்த இலக்கியம் நேரிடையாக வாழ்க்கையிலிருந்து முகிழ்த்து மலர்கிறது. நாம் அதனைப் படிக்குங்கால் வாழ்க்கையோடு நமக்குப் பரந்துபட்ட தொடர்பு ஏற்படுகிறது. அதோடு நெருங்கியதும் புதியதுமான தொடர்புகளையும் நாம் எய்துகிறோம். இக் காரணங்களினால் இலக்கியம் ஆற்றலுடையதாக அமைகிறது. மனிதன் தன் வாழ்க்கையில் கண்டவை, நுகர்ந்தவை, நம்மனைவரையும் கவரத்தக்க பொருள்களைப் பற்றி அவன் சிந்தித்தவை, உணர்ந்தவை ஆகியவைகளையும் இலக்கியம் சிறப்பாகக் கொண்டு விளங்குகின்றது. இதனால் இலக்கியம் அடிப்படையில் வாழ்க்கையின் விளக்கமாகக் கருதப்படுகிறது."[1] தமது நூலில் இவ்வாறு கூறியிருக்கிறார். இதிலிருந்து வாழ்க்கையில் ஒரு மனிதனின் அனுபவ உணர்வுகளைப் பற்றி இலக்கியங்கள் எடுத்துரைக்கும் என்பதை அறிய முடிகிறது.

## இலக்கியங்களில் அறம்

சிற்றரசர்களில் சிறந்தவனாகக் கருதப்படும் பாரி மிகச் சிறந்த கொடை வள்ளலாக இன்றளவிலும் போற்றப்படுகிறார். கொடை வள்ளல் தன்மை என்பது சக மனிதனுக்கு உதவுவது மட்டுமே இல்லை. புல், பூண்டு, தாவரம், மரம் போன்றவற்றையும் தன்னைப் போலவே மற்ற உயிர்களையும் கருதக் கூடிய நிலையை உடைய தன்மையைப் பெற்றிருப்பதும் ஆகும். சகமனிதனைத் தாண்டிப் பிற அஃறிணை உயிர்களையும் உயர்திணையாகக் கருதும் ஆற்றல் அறிவு முதிர்ச்சி உடையவர்களுக்குநம் எல்லைதாண்டிச் சிந்திப்பவர்களுக்கும் மட்டுமே உரிய உயரிய பண்பாகும். முல்லைக் கொடியானது படர்ந்து வளர்வதற்குத் தன்தேரைக் கொடுத்தல் என்பது முட்டாளதனமானது என்று அனைரும் கருதக்கூடும். ஆனால் பாரி அப்படி நினைக்கவில்லை. இதனை "இரக்கசிந்தனையுடைய சிறந்த கொடையாளிக்கழகு உடனே பிறர்படுந்துன்பத்தை நீக்குதலாகும். இந்த முறையில் முல்லைக்கொடியின் துன்பத்தை உடனே நீக்க அப்பொழுது தான் ஏறி இருந்த தேரைத்தவிர அவனிடம் ஒன்றுமில்லை. கிளை நாட்டுவதென்றால் அரிவாள் தேடி, அல்லது கோடாரி தேடி, கிளையை வெட்டி நாட்ட நேரமாகு மல்லவா? ஆதலால் இவ்வாறு செய்தான். அன்றியும் "கொடை மடம்" என்பது முன்னோர்களால் சிறப்பிக்கப்படுவது. அதாவது கொடுப்பதில் இன்னது இனியது என்று பாராது உடனே கொடுப்பது சிறந்ததென்பதே இதன் கருத்து."[2] இவ்வாறு நூலாசிரியர் அறச்சிந்தனையைப் புலப்படுத்தியிருப்பதை அறிய முடிகிறது.

## வள்ளுவர் கூறும் அறம்

அறச்சிந்தனையைப் போல நன்மை தருவது இவ்வுலகில் வேறு இல்லை. அதனால் அறத்தை வாழ்வில் ஒரு மனிதன் தொடர்ந்து கடைப்பிடித்து வர வேண்டும் என்கிறார். அறம் செய்வதை ஒரு மனிதன் மறந்தான் என்றால் அதைவிடத் துன்பம் தருவதும் இவ்வுலகில் வேறு இல்லை என்று அறம் செய்தலின் இன்றியமையாமை பற்றித் திறம்பட எடுத்தியம்பியிருக்கிறார். அதனை,

அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை; அதனை

மறத்தலின் ஊங்கில்லை கேடு"[3]

இவ்வாறு தம்முடைய குறட்பாவில் புலப்படுத்தியிருப்பதை அறிய முடிகிறது.

## பிறர் நலம் பேணல்

மனித வாழ்வு பெரும்பாலும் தற்போது தன்னலத்தை மட்டுமே பேணி வாழப்படுகிறது. பிறர் நலத்திற்காக எவரும் வாழ்வது இல்லை. மனித மனம் தற்போது மிகச் சுருங்கி விட்டது. ஆனால் இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த வள்ளுவர் பிறர் நலத்திற்காகவும் வாழவேண்டும் என்று வலியுறுத்தினார். அவ்வழியில் வாழ்ந்தோர் ஏராளம். அவர்களை முன்னோடிகளாக எடுத்துக்கொண்டு இன்றளவிலும் கொண்டாட வேண்டும். இதனைப் பேராசிரியர் ப. மருதநாயகம் அவர்கள், "சங்கச்சான்றோர் வலியுறுத்திய பிறர்நலம் பேணல் எனும் வாழ்வறம் வணிகர்கள் மூலமாகக்

கிரேக்கத்திற்கும் ரோமாபுரிக்கும் சென்றிருக்கலாமென்றும் அவர் கூறுவது நாம் எண்ணிப்பார்க்க வேண்டிய செய்தியாகும். செனகா, திருவள்ளுவருக்குக் காலத்தால் முற்பட்டவர் என்ற கருத்து நிலவியபோது தனிநாயக அடிகள் இத்தகைய ஊகத்தை முன்வைத்தார்"[4]

இவ்வாறு தமது சிந்தனையைக் கூறியிருக்கிறார்.

## மாற்றுச் சிந்தனையில் நீதி நூல்கள்

நீதியையும் அறத்தையும் சமூக ஒழுக்கத்தையும் நீதி நூல்களின் வழி அறிந்து கொண்டோம். மனித சமூகத்தைச் சரியான பாதையில் நடத்திடவும் ஒழுக்கக் கட்டமைப்பை ஏற்படுத்தவும் இத்தகைய அறநூல்கள் எழுதப்பட்டன. அதில் வள்ளுவமும் ஒன்று. ஆனால் தி.சு.சத்தியம் தனது கட்டுரையில் நீதி நூல்களைப் பற்றிய சிந்தனையைத் தூவியுள்ளார். அது இவ்விடத்தில் சிந்திக்கற்பாலது. "தமிழில் நீதி நூல்களின் தோற்றம் மிகுதி. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் முதல் ஔவையின் ஆத்திச்சூடி வரை நீதி நூல்களின் தொடர்ந்த செல்வாக்கினைத் தமிழ்ச் சமூகத்தில் காணலாம். இதன் அடிப்படை யாது? மாற்றங்களுக்கு இடம் கொடாத நீலவுடைமைச் சமூகத்தின் இறுகிய விதிகளே நீதி நூல்களாக உலா வந்தன. ஆதிக்க சமூகத்திற்கு அரணாக அமைந்த இந்நீதி நூல்கள்-நியதி நூல்கள் பெண் அடிமைத் தனத்திற்கும் காவல் காத்து வந்தன. ஏட்டிலக்கியங்களைப் போலவே வாய்மொழி இலக்கியங்களிலும் இத்தகைய செல்வாக்கை-செயலாண்மையைக் காண இயலும். சமூக ஆளுமை விதிகளை மீறாமல் ஆண்கள் வாழவும், அந்த ஆண்களுக்கு அடங்கிப் பெண்கள் வாழவும் மேற்குறித்த பலவகைத் தொன்மங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இனி, அவற்றுள் பெண் அடிமைத்தனத்தை மிக விழிப்பாகக் கட்டிக் காத்த வலிமை சான்ற சில தொன்மக் கருத்தியல்களைக் காண்போம்"[5]

இவ்வாறு நீதி நூல்களின் தோற்றுவாய் குறித்த சிந்தனை இவ்விடத்தில் சற்று சிந்திப்பதற்கும் உரியது. அடித்தட்டுச் சமூகத்தை ஆதிக்க சமூகம் சிந்திக்க விடாமல் தன் கைப்பாவையாக இறுதி வரைக்கும் வைத்துக் கொள்ள இத்தகைய விதிகள் நிரம்பிய இலக்கியங்களை இயற்றியிருக்கப் புலவர்களைப் பணித்திருக்க முடியும். அதற்கேற்பப் புலவர்களும் இத்தகு விதிகள் மிகுந்த இலக்கியங்களைப் படைத்திருக்கவும் முடியும். எப்படிப் பார்த்தாலும் மனிதனது வாழ்வியலை ஒரு கட்டுக்குள் வரையறுத்து வைத்திருக்க வேண்டும் என்பதே இவ்வகை இலக்கியங்களின் தாத்பரியமாக இருக்க முடியும்.

## முடிவுரை

திருக்குறளில் அறத்தின் சிறப்பைப் பற்றி உணர முடிகிறது. அறம் செய்து வாழ்ந்தால் இவ்வுலகில் நிலைபெற்று நீடூழி வாழ இயலும் என்பதைக் காண முடிந்தது. அன்பையும் அறத்தையும் வாழ்வியலில் கடைப்பிடித்து வாழ்ந்தால் வாழ்க்கை சிறக்கும் என்பதை அறிந்தோம். இவ்வுலகம் பரந்துபட்டது. எல்லையற்று மனிதன் நடோடியாகவும் குறிக்கோள் இல்லாமலும் வாழ்ந்து வந்தால் இச்சமூகக் கட்டமைப்புச் சிதைந்து விடும் என்பதற்காக இத்தகைய நீதி நூல்கள் தோற்றம் பெற்று எழுதப்பட்டிருக்கின்றன. அதில் அறத்தின் மேன்மையையும் புகழையும் வள்ளுவன் வழியினில் அறிய முடிந்தது.

## References

இலக்கியத்திறனாய்வியல்-டாக்டர் தா.ஏ.ஞானமூர்த்தி

தமிழர் வீரம்-ஆசிரியர் குருசாமி சிதம்பரனார்

பதினெண்கீழ்க்கணக்கு மூலமும் உரையும்-தொகுப்பாசிரியர் எஸ்.கௌமாரீஸ்வரி

மேலை மெய்யியலுக்கு வழிகாட்டிய வள்ளுவம்'-பேராசிரியர் ப.மருதநாயகம்

பெண்ணியமும் பாரதியும்-பதிப்பாசிரியர் வீ-அரசு

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License